உ

சிவமயம்

யாழ் பல்கலைக்கழக நடனத்துறை மிருதங்க விரிவுரையாளர் - லயஞானவாரிதி

திரு. சி. மகேந்திரன் அவர்களின்

மாணவன்

# செல்வன் திருச்செகநாதன் வரோதயன்

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்



தலைவர்: பேராசிரியர். இ. குமாரவடிவேல் அவர்கள்
(விஞ்ஞான பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

இடம் :அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்த்தான
அன்னசுரபி மண்டபம்.

காலம்: 28.01.2001 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9மணி



மிருதங்கக் குரு : திரு. சி. மகேந்திரனும்
சீஷன் : செல்வன் . தி. வரோதயனும்

# அரங்கிசைக்கலைஞர்கள்



பாட்டு : இசைக்கலைமணி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள்
(இசைஆசிரியர் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி)

உடன்பாடுபவர் : செல்வி ஜனனி நல்லைநாதன் அவர்கள்

வயலின் : இசைஞானத்திலகம் திரு.உ.இராதாகிருஷ்ணன் அவர்கள்

மிருதங்கம் : கலாவித்தகர் செல்வன் தி.வரோதயன் அவர்கள்

கஞ்சிரா : சங்கீதரத்தினம் திரு.மா.சிதம்பரநாதன் அவர்கள்
(நுண்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர் இசைத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கடம் : செல்வன் ம. லோகேந்திரன்

தம்புரா : சங்கீதபூஷணம் **K.R.** நடராஜா அவர்கள்

உ
ஓம் ஸ்ரீ நாராயணாய நம

# குருவின் ஆசிச்செய்தி



"தோற்றம் துடியதனில்"என்பது உலக தோற்றம் குறிக்கும் தெய்வ வாக்கு. உலகம் தோன்றுவதும், பிரபஞ்ச செயற்பாடுகளும் துடியில் இருந்து பெறப்படும் நாதத்தினூடாகவே நிகழ்கின்றன. நாதம் ஓம் எனும் பிரணவமாகும். இத்தகைய தத்துவங்கள் பொருந்திய நாத சொரூபமாயுள்ள துடிக்கருவியிலிருந்து மருவியது மிருதங்கக்கருவி என வரலாறுகள் சுட்டும்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத கலைகளின் திறன்களையும், தெய்வீக உணர்வுகளையும், ஆன்மீக சிந்தனைகளையும், ஆற்றலையும், அமைதியையும் தருகின்ற சுருதியொடு லயமாகச் சேர எழுந்த வளர்ந்த இக்கருவிக்கு இணையே கிடையாது எனலாம். இசை உலகிற்கு ஓர் தனித்துவமான முத்திரையைப் பதிக்கின்றது. வையகம் சிறக்க எழுந்த இத் தோற்கருவியினூடாக பெறப்படும் நாதக் கலையின்பத்திற்கு எல்லையே இல்லை.

பண்டைய தமிழர்கள் கையாண்ட தோற்கருவிகள் பலப்பல. அவற்றுள் பிந்தியதும், கேட்போரை அக்கணமே கவரவல்லதும், நாத நுட்பங்கள் பொருந்தியதும், எவ்வினமக்களும் விரும்பத்தக்கதுமாகிய மிருதங்கம் வடமொழி கலந்த சொல்லாயினும் தமிழ்மொழிக்குரியதாய "மிருதுவான அங்கத்தைப்

போன்றதும், தங்கத்தைப் போன்றதும்,''எனப் பொருள்படும். இக்கருவியைப் பெருமைப்படுத்தும் வரலாறுகள் பலப்பல. இதன் இசை ஒலியால் காய்வாழைக்குலை பழுத்ததாக ஓர் வரலாறு உண்டு. இன்று தென்னிந்தியாவில் இக்கருவியைப் பிரமிக்கத்தக்க வகையில் இசைக்கும் கலைஞர்கள் பலர். இத்தகைய பெருமை வாய்ந்ததும் தெய்வத்தன்மை பொருந்தியதுமான கலையைக் கற்க நாட்டம் கொண்டு என்னிடத்திலே ஐயம் திரிபறக் கற்று இன்று அரங்கேறும் செல்வன் வரோதயன் எனது முதன் மாணாக்கர்களில் ஒருவராவர்.

இன்றைய இந்த நிலையில் இவரைக் காண வேண்டும் எனும் அவா மேலீட்டிலுள்ள பெற்றோர்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர் வடஇலங்கை சங்கீதசபை ஆசிரிய தரப் பரீட்சையில் முதற்பிரிவில் சித்தியடைந்து ''கலாவித்தகர்'' விருதினையும் பெற்றுள்ளார்.மேலும் கல்வியிலும் விஞ்ஞானபீட மாணவராய் உள்ளது குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளுக்கு முன் இந்திய நாட்டிலிருந்து வருகைதந்த கலைஞர்கள் இலங்கைத்தீவின் வடபுலத்தின் அளவெட்டி எனும் கிராமத்தில் வாழ்ந்ததாக வரலாற்று வாயிலாக நாம் அறிவோம். கலை வளர்க்கும் அளவெட்டி என்றால் இன்று முன் நிற்பது ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயம். அருள்பாலிக்கும் மாயவனைக் கண்டு தரிசிக்கும் மக்கள் கூட்டம் தினம் தினம்.

அத்தகைய கோவில் சிறப்புப் பொருந்திய கண்ணன் அருளினால் மக்களின் குறைகளைப் போக்கி அருளாசி வழங்கிக் கொண்டிருப்பவர் அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்கள். கலைஞர்களிடத்தே மிகுந்த பேருள்ளம் கொண்ட ஐயா அவர்களின் பேரனே செல்வன் வரோதயன் என்பது குறிப்பிடத்தக்கது. சாந்தம், அன்பு, பக்திமிக்க எனது மாணவர் கண்ணனின் அர்ச்சகருமாவர். தெய்வ கடாக்ஷம் பொருந்திய இவர் எனது மாணவராய் வருவதற்கு நான் செய்த பாக்கியமே.

இன்றைய அரங்கேற்ற வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் அனைவருக்கும், குறிப்பாக துணைவேந்தர் அவர்கட்கும், பட்டப்படிப்பின் பீடாதிபதி அவர்கட்கும், விஞ்ஞான பீடாதிபதி அவர்கட்கும், மிகவும் அன்புடன் ஆதரவு காட்டி ஒத்துழைத்த கலைஞர்கள் யாவருக்கும் நன்றி கூறி மேன்மேலும் எனது மாணவர் இக்கலையில் நன்கு பிரகாசிக்க மாதவ தேவனையும் எனது குருவாகிய உயர்திரு இராமநாதன் அவர்களையும் வணங்கி ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

*நடனத்துறை ,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*18-01-2001*

***சி. மகேந்திரன்***
*மிருதங்க விரிவுரையாளர்.*



## அருட்கவி . சீ.விநாசித்தம்பி

(அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்)

அவர்கள் வழங்கிய

**வாழ்த்துமாலை**

சீரளவை நாகேஸ்வ ரத்தில் மேவும்
ஸ்ரீநாக வரதநா ராயணர்க்கும்
பேரதிக கணபதி வேல்அழகன் தில்லைப்
பிறையாளன் மனோன்மணிக்கும் பூசைத்தொண்டன்
வாரமிகு பண்புடையான் சைவநீதி
வாய்ந்த நெறிக்குணமுடையன் பணிவு வாய்மை
சேரகத்தான் வரோதயனின் கலை செழித்துத்
திகழும்மிரு தங்கநிகழ் வினிதுவாழி.

***

அன்பன்திருச் செகநாதன் என்னும்தந்தை
அன்னைஸ்ரீ ரங்கநா யகியும் செய்த
பொன்பரவு தவத்தில்வரு மருமை மைந்தன்
புகழ்பூத்த மகேந்திரனின் புனிதசீஷன்
இன்பமுயர் வரோதயன் நிகழ்த்தும் ஞான
இசைபெருகு மிருதங்க அரங்கம் தில்லை
முன்பிருக்கும் திருநந்தி கருணை செய்ய
முதுநாத லயம் சிறக்க வாழி வாழி.

***

மிருதங்க குருமணியாம் மகேந்திரன்சீர்
விளங்குபணி வாழிகலா வித்தகர்ப்பேர்
தருசெல்வன் வரோதயனும் வளர்த்தணைக்கும்
தாய்தந்தை உயர்கல்விச் செல்வமூட்டும்
அருளாசி ரியர்களும்பல் லாண்டுவாழி
ஆசியுரை வாழ்த்துரைகள் பாராட்டாற்றி
வருசிறப்புச் செய்தோரெல் லாரும்நாக
வரதநா ரணனருளால் வாழிவாழி.

***

நாகேஸ்வரம்
அளவெட்டி
28-01-2001

அருட்கவி..சீ.விநாசித்தம்பி

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளின்

(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமுதல்வர் இரண்டாவது குருமகாசந்நிதானம்)

## அருளாசிச்செய்தி

அன்பு நெஞ்சத்தீர்! 26-12-2000

திருச்செகநாதன் வரோதயன் அவர்களது மிருதங்க அரங்கேற்றத்தை அறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றோம். தமிழரின் பாரம்பரிய இசையாக விளங்குவது மிருதங்க வாத்தியம் ஆகும். இக்கலையை குருமுகமாகப் பழகுவது மரபுவழி இதற்கமைய இக்கலையைப் பயின்றவர் மிருதங்கரத்தினம் திரு. மகேந்திரன் அவரைக் குருவாகக் கொண்டு இக்கலையை செல்வன் வரோதயன் பயின்று இறைவனுக்கும் குருவுக்கும் அர்ப்பணம் செய்வதே அரங்கேற்றநிகழ்ச்சியாகும். ஆடல் வல்லானுடைய திருநடனத்திற்கு நந்தியெம்பகவானால் இசைக்கப்பட்டதே மிருதங்கவாத்தியம். பார்ப்பதற்கு கடினமாக இருந்தாலும் அனுபவிக்கின்ற போது இன்பமான நிலையை உருவாக்குகின்றது. தோல் வாத்தியங்களில் முக்கியமான இடத்தை பெறுவது மிருதங்கம். இவ்வாத்தியத்தைப் பயின்று அரங்கேறும் செல்வன் வரோதயன் மேலும் பலவளர்ச்சி கண்டு இசைத்துறைக்கும் சமூகத்திற்கும் தொண்டாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம். இவரை பெற்றெடுத்த தாய் தந்தையருக்கும் இவரை உருவாக்கிய குருவுக்கும் இவர்நிகழ்ச்சிக்கு அணிசெய் கலைஞர்களுக்கும் இறைவன் ஆசி கிடைப்பதாக

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
(இரண்டாவது குருமகாசந்நிதானம்)

# கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவிதேவஸ்தானம் தெல்லிப்பழை )

அவர்களின்

## ஆசியுரை

யாழ் மண்ணில் இசைத்துறையில் முன்னணி வகிக்கும் கிராமம் அளவெட்டி ஆகும். தவில் வித்துவான்கள், நாதஸ்வரவித்துவான்கள், மிருதங்கவித்துவான்கள், பண்டிதர்கள், புலவர்கள், கதாப்பிரசங்கமேதைகள், சங்கீதபூசணங்கள், ஆகியவர்களினால் பெருமை பெற்றஇடம் இதுவாகும். இத்தகையோரில் இன்றைக்கும் மதிப்புக்குரிய ஒருவராக விளங்குபவர் அருட்கவி விநாசித்தம்பி புலவர் ஐயா அவர்கள். இவர்களின் வாரிசாகவும் பேரப்பிள்ளையாகவும் விளங்குகின்ற செல்வன் திருச்செகநாதன் வரோதயன் அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமை அடைகின்றேன். மிருதங்க ஆசிரிய தராதரம் பெற்றவர் இவர். அத்துடன் "கலாவித்தகர்" என்ற பட்டமும் பரீட்சையில் இவருக்குச் சூட்டப்பட்டது. யாழ்பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானப்பிரிவில் கற்கும் வரோதயன் அவர்கள் மிருதங்க வித்துவான் லயஞானி திரு.சி.மகேந்திரன் அவர்களிடம் மேற்படி கலையை நன்கு பயின்றுள்ளார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தாம் கற்றுத் தேறிய மிருதங்கக் கலையில் அரங்கேற்றம் நடாத்த இருப்பது மகிழ்ச்சிக்குரியது. குறிப்பிட்ட இந்த அரங்கேற்று வைபவம் திருவருட் துணை கொண்டு வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி,,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அவர்களின்

## வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் கல்விபயிலும் செல்வன் தி.வரோதயன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்தையொட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கலையார்வம் மிக்க செல்வன் வரோதயன் தனது உயர்கல்வியுடன் மிருதங்கத்தையும் கற்று அதனை அரங்கேற்றும் அளவிற்கு நிறைவு செய்திருப்பது பாராட்டுக்குரியது. இவர் மிருதங்கத் துறையில் சிறந்த கலைஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் நடனத்துறையில் விரிவுரையாளருமான லயஞான வாரிதி சி.மகேந்திரன் அவர்களின் மாணவராவார்.

செல்வன் வரோதயன் தனது கலையார்வத்தை அரங்கேற்றத்துடன் நிறுத்திவிடாது அதனைத் தொடர்ந்தும் வளர்த்தெடுக்க வேண்டுமென அவரைவேண்டிக்கொள்கின்றேன். அவரின் எதிர்காலம் சிறப்புற விளங்க வாழ்த்துகிறேன்.

துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## ந.வி.மு.நவரத்தினம் M.MUS.PHL

(தலைவர் இசைத்துறை யாழ் பல்கலைக்கழகம்)

அவர்களின்

# வாழ்த்துரை

"கோடல் கோங்கங்குளிர்
கூவிளமாலை குலாயசீர்
ஓடுவெண் பிறைஒளிர்
சூடு மொருவனார்
பாடல் வீணை முழவம் குழல்
மொந்தை பண்ணாகவே
ஆடுமாறு வல்லான்
ஐயாறுடையையனே.

என்று மொழிவது சம்பந்தர் திருமுறை. உலகும், உயிர்களும் இயங்க வேண்டும். இதற்கு இறைவனின் ஐந்தொழில் மூலம் ஆகின்றது. ஐந்தொழில் ஆடலால் இயற்றப்பெறுகின்றது. பாடலால் இயற்றப்பெறுகின்றது. வீணையால் இயற்றப்பெறுகின்றது. குழலால் இயற்றப்பெறுகின்றது. ஐந்தொழிலின் இலய நகர்வு முழவால் சமச்சீர் அடைகின்றது.

மனித இருதயத்திலிருந்து 84 நூறாயிர யோனி பேத உயிர் வர்க்கங்களது அனைத்து நடவடிக்கைக்கும் மூலமாக அமைவது லயம். இது மனம் சாரும் வேளை மனோலயம் ஆகின்றது. தானத்திலே சிறந்த தானம். நிதானம் நிதானங்களைக் காட்ட மனோலயம் துணை புரிகின்றது.

மனம், வாக்கு, காயம் சித்தி உண்டாக மனோலயம் கருவாக அமைகின்றது.

ஐந்தொழிலியற்றும் ஆடலரசனுக்கு முழவின் லயம் கருவாக அமைகின்றது.

"மண்ணார் முழவு"
"தண்ணார் முழவு"
"கண்ணார் முழவு"
"பண்ணார் முழவு"
"விண்ணார் முழவு"
"எண்ணார் முழவு"

எனச் சுட்டும் சங்கச் சான்றுகள் ஒவ்வொன்றும் முழவின் வியத்தகு நலன்களை விதந்துரைக்குமாறு அமைந்திருத்தல் காணலாம். இறுதியடியாகக்

காணும் எண்ணார் முழவு தாளகாலப் பிரமாணங்களைக் குறித்து நிற்றல் காணலாம். "ஆட எடுத்திட்ட பாதம் நம்மை ஆட்கொள்வதற்கும்" முழுவு துணை தருகின்றது.

சங்க நூல்களில் இசைமயமாய் நிறைந்து காணும் நூலில் பரிபாடல் முதன்மை பெறுகின்றது.

"இசைபடுபக்க மிருபாலுங் கோலி
..............................................................
..............................................................
..............................................................
யாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்
பாணி முழவிசை யருவிநீர் ததும்ப"
எனவரும் பரிபாடலடிகளும்

"மடமயிலகவ ..........................................
..............................................................
பகர்குழல் பாண்டிலியம்ப வகவுநிகர்
நாநவில் பாடல் முழவதிர்ந் தன்ன"

எனவரும் பரிபாடலடிகளும்,

"ஒருதிறம் பாணர் யாழின் தீங்குரலெழ
..............................................................
..............................................................
ஒருதிறம் மண்ணார் முழவினிசையெழ
ஒருதிறம் அண்ணனெடுவரை யருவிநீர் ததும்ப"

எனவரும் பரிபாடலடிகளும்,

"ஆடமைக்குயின்ற......................................
..............................................................
பாடின்னருவிப்பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதை குரலாகக்"

எனவரும் அகநானூற்றடிகளும் தமிழர் முழவின்தாணைத் தலைமையுரைத்து நிற்றலானது முழவின் தலைவர்கள் தமிழர்கள் என்பதையும்; இசை நுண்மையின் குழல்வழி நின்ற யாழ்த்தலைவரும் தமிழர் என உரைக்கா நிற்றல் உயர்மாண் உணர்வாம். இதன் பின் முழவிற்கு மேன்மை தேடல் வேண்டற்பாலது.

"அருங்கலை முதல்வன்" என முழவாசிரியரைப் போற்றும் சிலப்பதிகாரம் உட்பட பல நூல்களாலும் முழவின் சிறப்பு பல்லாற்றலும் பெறப்படும்.

இத்துணைச் சிறப்பின் முழவை தமது பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உருவாக விளங்கும், இசைச் சித்தர் அருட்கவி ஐயா அவர்களது பரம்பரையில்

வந்த "முழவிசைத் தென்றல்" செல்வச் சீராளன் வரோதயன் - திருச்செகநாதன் அவர்கள் நமது அன்பினியநண்பர் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மிருதங்க விரிவுரையாளர் லயஞானதிலகம் ஸ்ரீ.எஸ்.மகேந்திரன் அவர்களிடம் நன்கு கற்று இன்று ஸ்ரீசிவகாமி அம்மையுடனாய அம்பலக்கூத்தன் திருவருளால் அரங்கேறுவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தருகிறது. இவ்விழா அவரது கலைத்திறனின் தொடக்க விழா. இன்று தொடங்கும் அவரது கலைப்பணி நாளொருவண்ணமாக வளர்ந்து அதி உயர் இடத்தைப் பெறவேண்டும் என எல்லாம் வல்ல உலக மாதாவாகிய அன்னை ஸ்ரீ சிவநாகேஸ்வரியின் பொற்பாதங்களை வாழ்த்தி அமைகின்றேன்.

"ஆடல்வல்லானருளால் அளவையிலுதித்தான்
அரங்கனருளால் இன்றரங்கங்கண்டான்
பாடல், ஆடல், புகழ் பண்ணார் முழவிசைத்து
பார் புகழ் "முழவிசைப்பரிதியாய் "பல்லாண்டு
பணி செய்தரனடியென்றும் பணிந்தே வாழி
வாழ்க வளமுடன்"

ந.வி.மு.நவரத்தினம் M.MUS.PHL ,
தலைவர்,
இசைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



## பிரம்மஸ்ரீ அ.நா. சோமாஸ்கந்தசர்மா

(சிரேஷ்ட விரிவுரையாளர் முதுதத்துவமாணி இந்துமதகுரு)

அவர்களின்

# ஆசிச்செய்தி

அளவெட்டி திருநாகேஸ்வரம் திருமதி, திரு.திருச்செகநாதன் தம்பதிகளின் புதல்வன் வரோதயன் அவர்களின் மிருதங்கஅரங்கேற்றம் அவர்களின் குலதெய்வமாகிய ஸ்ரீ நாராயணன் சந்நிதியில் நிகழ்வது பற்றி மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். வரோதயன் ஈழத்தின் சிறப்புமிகுவாக்கேயரும் கதாகாலக்ஷேப விற்பன்னருமாகிய மதிப்புக்குரிய அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் வழித்தோன்றல். பேரனாவர். எனவே வரோதயனின் மிருதங்கக்கலை ஓர் வரன்முறைக் கலை என்பதில் ஐயமில்லை.

மிருதங்க இசைக்கருவி சமுதாயத்தில் அதிமுக்யத்துவமுடையதாய் இன்று விளங்குகின்றது. பண்டைய காலத்தில் இக்கருவிக்கலைஞன் "அருந்தொழில் முதல்வன்" எனக்கருதப்பட்டுள்ளான். இன்று இக்கலைகுறிப்பாக யாழ்ப்பாணத்தில் உன்னத நிலையில் வளர்ந்து வருவது வெளிப்படை. இக்கருவி சுருதி, லயம், என்னும் சிவம், சக்தி சேர்ந்த சுருதிலயக்கருவியாகும். மேலும் நந்திகேஸ்வரர் விநாயகர், நாராயணன், உமை ஆகிய தெய்வங்களால் பயிலப்பட்ட கருவியுமாகும். இத்தகைய சிறப்புக்கருவியை வரோதயன் பயின்று இக்கருவிக்கு அதிபதியாகவும் குலதெய்வமாகவும் விளங்கும் ஸ்ரீநாராயணன் தேவஸ்தான அரங்கில் அரங்கேறுவது பெரும் பேறாகும். அரங்கேற்றம் நடைபெறுகின்ற சூழல் மங்கள இசைக்கலைஞர்கள், நாட்டிய நாடக, இசை, விற்பன்னர்கள் நிறைந்ததாகும். குறிப்பாக இவருக்கு குருவாக அமைந்தவர் ஈழத்தின் தலைசிறந்த மிருதங்க கலைஞருள் ஒருவரான 'சங்கீதரத்தினம்' சி.மகேந்திரன் ஆவார். "தாரமும்

குருவும் தலைவிதிப்பயன்" என்னும் முதுமொழிக் கிணங்க வரோதயன் நல்லதோர் குருவைப்பெற்றுள்ளார். பெற்றார் இவரை முந்தியிருக்க செய்துள்ளனர். அதுபோன்று இவ்வரங்கேற்றத்தால் இவர்பெற்றோர் தவமும் புலப்பாடாகின்றது.

வரோதயன் மிருதங்கக் கலையை தனது கல்வியுடன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்புடன் ஆர்வமாகப்பயின்று வடஇலங்கை சங்கீதசபையின் ஆசிரியர்தரப் பரீட்சையிலும் சித்திபெற்று மேலும் மிருதங்க கலாவித்தகர் பட்டப்பரீட்சையிலும் சித்திபெற்றவர். எனவே இவரது அரங்கேற்றம் முழுமையானது என்பதில் ஐயமில்லை.

இன்று அரங்கேறும் செல்வன் திருச்செகநாதன் வரோதயன் அவர்கள் சிறப்பாக மிருதங்கம் இசைக்கவும் தொடர்ந்து கற்றோரைக் காமுற்று கலை கரைசேரக் கற்றும் தாமும் பிறரும் இன்புறும் வண்ணம் இறைவனைச் சேவித்துக் கலைபரப்பும் வண்ணம் பல்லாண்டு தீர்க்காயுளுடன் வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாராயணன் பாதம் பணிந்து ஆசீர்வதிக்கிறேன்.

"இசைக்குருகான் எதற்கும் உருகான்
எதற்கும் உருகுவான் இசைக்குருகுவான்"

சுபம்

இங்ஙனம்

அ.நா. சோமாஸ்கந்தசர்மா,
சிரேஷ்ட விரிவுரையாளர்
இசைத்துறை,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# கலாநிதி சபா. ஜெயராஜா

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறைத் தலைவர்)

அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

மிருதங்கம் பற்றிய தொன்மங்கள் அதனைச் சைவச் சித்தாந்தத்தின் தொடர்பாடற் கருவியாக விளங்குதல் குறிப்பிடத்தக்கது. மிருதங்கத்தின் முதல் ஒலி ஓங்கார ஒலியாகும். பிரணவமாகிய ஓங்காரத்தை ஒலித்து அதனைத் தொடர்ந்து நமசிவாய என்ற திருவைந்தெழுந்தை அட்சர சுத்தமாக ஒலிக்கவல்ல இறைபுகழ்கருவியாக மிருதங்கம் விளங்குகின்றது. இந்த ஆழ் பொருளை விளக்கும் தொன்மங்கள் நந்தியெம்பெருமானை விட்டு நீங்காத இறை சாற்றுக்கருவி மிருதங்கமென்று குறிப்பிடுகின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற சிவனது ஐந்தொழில் ஆற்றல்களையும் த,தி,தொம், நம் ஜெம் என்ற அட்சரங்களாக்கி ஒலியுலகிலிருந்து, மொழியுலகும் இசையுலகும், ஞானவுலகும் மலர்ச்சி கொள்வதை மிருதங்கதத்துவம் புலப்படுத்துகினறது.

ஆன்மாக்களின் பரிபக்குவ நிலைக்கேற்ப ஆணவ மல இருளைப் போக்கி, வினைகளை நுகரச் செய்து பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்லும் ஒலி அதிர்வுகளின் மிருதங்க இசை பற்றிய தொன்மக்கருத்துக்கள் பரவசமூட்டுகின்றன. பாசஞானத்தையும், பசுஞானத்தையும் அறியச் செய்து அதற்குமேலாக சிவானந்தத்தை அறிவிக்க வல்ல தோற்கருவியாக விளங்கும் மிருதங்கக் கலையை ஆற்றுகை வடிவிலும், அறிமுறை வடிவிலும், அவற்றுக்கு மேலாம் ஞான வடிவிலும் கற்பித்துக் கொண்டிருக்கும் பேராசான் எஸ். மகேந்திரன் அவர்களுக்கும் இக்கலையைத் தெய்வீக சிந்தையுடன் பயின்று அரங்கேற்றம் செய்யும் செல்வன் வரோதயன் திருச்செகநாதன் பாராட்டுக்குரியவர்.

கலாநிதி. சபா ஜெயராசா,
யாழ் பல்கலைக்கழகம்.

# தேனிசைவாரி, சங்கீத பூஷணம் வீ.கே.நடராஜா

பகுதிநேர விரிவுரையாளர் இராமநாதன் நுண்கலைப்பீடம்

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை.

செல்வன் வரோதயன் 28-01-2001 அன்று மிருதங்க அரங்கேற்றம் செய்வதை அறிந்து அகமகிழ்வடைகின்றேன். உத்தம குணமும், பணிவும் கலையில் ஆர்வமும் உள்ள எனது மாணவர்களில் இவரும் ஒருவராவார். இசைபயிலும் வேளைகளில் மிகஅடக்கமாகவும் பணிவாகவும் நடந்துகொள்வார். என்னுடைய கச்சேரிகள் பலவற்றிற்கு மிருதங்கம் கற்றுக்கொண்டிருக்கும் வேளையிலேயே பாடல்களிற்கேற்ற வல்லினமெல்லினமாக சங்கதிகளிற்குத் தகுந்தவாறு வாசித்து எனது பாராட்டையும் பெற்றுள்ளார். மிருதங்க விரிவுரையாளர். திரு. மகேந்திரன் அவர்களைக் குருவாகக் கொண்டு லய வித்தியாசத்துடன் லயசுத்தமாக வாசிக்கும் திறனைக் கற்றுக்கொண்டது குருவின் திறமையை அறியக்கூடியதாகவுள்ளது. தாளவாத்தியமாகிய மிருதங்கத்தைப் பாடல்களுக்கு ஏற்றவாறு சுத்தமாக வாசித்து பேரும் புகழும் பெற்று பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல கும்பழாவளை விநாயகனை வேண்டி எனது மனமுவந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வீ.கே. நடராஜா,
அளவெட்டி.

# சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை

(இசைக்கலைவேந்தன் கலாபூஷணம் பிரதிக்கல்விப்பணிப்பாளர் உபதலைவர் வட இலங்கைச் சங்கீதசபை.

அவர்களின்

## ஆசிச்செய்தி

அளவெட்டி ஸ்ரீநாக வரத நாராயணர் கீர்த்தியும் சிறப்பும் தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்தும் அறிந்ததே. இவ்வாலயத்தில் வீற்றிருந்து மக்கள் துயர் துடைக்கும் அருளாளர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர். அகில இலங்கை இந்து சமயப்பேரவையின் தலைவர் இவரை யாவரும் அறிவர்.

இவரது மகளான ஸ்ரீரங்கநாயகியும் ஆசிரியர் திரு.திருச்செகநாதனும் செய்த தவப்பயனால் உதித்தவர். செல்வன் வரோதயன் ஆவார். சிறுவயதில் இருந்து பேரனாரின் வழிகாட்டலில் ஆலயபூசை வழிபாடுகளைக் கிரமமாகப் பக்திசிரத்தையுடன் செய்துவரும் இவர். தற்பொழுது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் முதலாம் ஆண்டு மாணவனாக உள்ளார்.

பாடசாலைக்கல்வியுடன் இறைபணி யாற்றிவரும் இவர் வடஇலங்கைச் சங்கீதசபையினர். நடாத்தும் மிருதங்க வாத்தியப் பரீட்சையில் ஒழுங்காகத் தோற்றிக் கலாவித்தகர் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சங்கீதபூஷணம் திரு.A.S. இராமநாதன் இந்தியாவில் சிதம்பரத்திலிருந்து ஈழநாட்டிற்கு வந்து மிருதங்க வாத்தியத்தைப் பலமாணவர்களுக்குக் கற்பித்து அரங்கேற்றியுள்ளார். இவரிடம் குருகுலவாசமாக மிருதங்க வாத்தியத்தைக் கற்றுத்தேறித் தற்பொழுது யாழ்பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு நடனத்துறை விரிவுரையாளராகவிருக்கும் சங்கீதரத்தினம், லயஞானவாரிதி திரு.சி.மகேந்திரன் அவர்கள் செல்வன் வரோதயனுக்கு ஞானகுருவாக அமைந்துள்ளமை இவருக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

செல்வன் திருச்செகநாதன் வரோதயன் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் 28-01-2001 அன்று ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வரங்கேற்றத்தைச் சிறப்பிக்க வாய்பாட்டுப் பாட இருப்பவர். இசைக்கலைமணி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்களும் வயலின்அணி இசையாளராக இசைஞானதிலகம் திரு. உ. இராதாகிருஷ்ணன் அவர்களும் இருப்பார் என அறிந்துகொண்டேன்.

பலகலைஞர்கள் ரசிகர்கள் பாராட்டவும் பெரியோர் ஆசியுரை வழங்கவும் நிகழவுள்ள இவ்வரங்கேற்றம் வெகு விமரிசையாக நடைபெறும் என்பது என் எண்ணம்.

இவரது அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற இறைவனைப்பிரார்த்தித்து எனது நல்லாசியையையும் வாழ்த்தையும் வழங்குகின்றேன்.

பொன்னாலைக் கோவிலடி
சுழிபுரம்
25-12-2000.

சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை

# பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்

பீடாதிபதி உயர்பட்டஆய்வுபீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

அவர்கள் வழங்கிய

## *வாழ்த்துரை*

எங்களுடைய பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவன் திருச்செகநாதன் வரோதயன் 28-01-2001 அன்று தான் இதுவரை கற்ற மிருதங்கக் கலையினை அவைக்கு முதன்முறையாக ஆற்றுகைப்படுத்தவுள்ளார். முதன்முறையாக மிருதங்கத்துடன் அரங்கேறவுள்ள வரோதயனையிட்டுத் தந்தை திருச்செகநாதன் அவர்களும் தாய் ஸ்ரீரங்கநாயகி அவர்களும் பெருமைப்படவுள்ளனர்.

ஒரு விஞ்ஞான மாணவன் அரங்கேறி ஒரு கலையினை அளிக்கை செய்வதையிட்டு விஞ்ஞானபீட மாணவர்களும் ஆசிரியர்களும் பெருமைப்படவுள்ளனர்.

வரோதயனின் குரு ஒரு நாடறிந்த மிருதங்க வித்துவான் ஆவார். லயஞானவாரிதி திரு. எஸ் . மகேந்திரன். எத்தனையோ மாணவர்களைப் பயிற்றி அரங்கேற்றியுள்ளார். எனினும், புதிதுபுதிதாகப் பயிற்றி அரங்கேற வைத்தவுடன், மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்னும் வகையில் இன்னொரு மாணவனின் பயிற்சி தொடங்கும் இந்த வகையில் வரோதையனுடைய அரங்கேற்றத்தினால் அவருடைய குரு திரு. மகேந்திரன் பெருமைப்படவுள்ளார்.

இவ்வரங்கேற்றத்திலே பங்கு பற்றுதற்கும், இந்நிகழ்வு தொடர்பாக வெளிவரும் மலருக்கு இச்சிறிய வாழ்த்துரையை எழுதுதற்கும் வாய்ப்புக் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

வரோதயனின் அரங்கேற்றம் சிறப்புற அமையவும் மிருதங்கக் கலையிலே அவர் மிகுந்த தேர்ச்சியுடைய கலைஞராகத் திகழ்வேண்டுமெனவும் சிவகாமியுடனுறை ஆடவல்லான் கழல் போற்றுகிறேன். வரோதயனுக்கு என் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அவர்களின்

# *வாழ்த்துச் செய்தி*

தமிழில் இசை என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. மனதை ஒருமைப்படுத்துவதையும் இசை என்கின்றோம். புகழையும் இசை என்கின்றோம்

'ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்கிறார் திருவள்ளுவர். இக்குறளில் இசை என்பது புகழ் எனப்பொருள் படும். இசை என்ற ஒரே சொல் புகழையும் மனதை வசப்படுத்துவதையும் குறிப்பது தமிழ் மொழியின் சிறப்புக்களுள் ஒன்று.

இனிய ஓசையை உடையது இசை: அது செவிக்கு இன்பத்தைத் தருகிறது. பண்டிதர், பாமரர், விலங்குகள், பறவைகள் யாவரையும் பரவசப்படுத்தும் தன்மை இசைக்கு மட்டுமே உண்டு. இசை நம்செவிகளுக்கு இன்பம் தருவதோடு அல்லாது நமது உணர்வுகளையும் மாற்றியமைக்கிறது. சிலவகை இசைகள் மனதிற்குச் சாந்தி தருகின்றன. சில ஆடவைக்கின்றன. சில தூக்கத்தை வரவழைக்கின்றன. இவ்வாறான நிலைகளை இசைதோற்றுவிக்க அடிப்படையாக இருப்பவை இராகமும் தாளமும்; உறுதுணையாக இருப்பவை இசைக்கருவிகள் வெவ்வேறு உணர்ச்சிகளைத் தோற்றுவிக்க இராகத்தில் உள்ள ஸ்வரங்கள் தாளத்திற்கேற்பப் படைக்கப்படவேண்டும். "ஸ்ருதி மாதா லயம் பிதா" என்பது முதுமொழி.

ஸ்ருதி என்கின்ற இராகம் அதன் நெளிவுகளுக்கு ஏற்பத் - தேவைப்பட்டால் -தனது இலக்கணத்திலிருந்து சற்றே வளைந்து கொடுக்கும். ஆனால் லயம் என்கிற தாளமோ எச்சந்தர்ப்பத்திலும் கண்டிப்பிலிருந்து தவற முடியாது. தாளத்தை அடிப்படையாகக் கொண்ட இசைக்கருவி மிருதங்கம். அதை லயம் பிறழாது வாசிப்பது ஒரு நுண்கலை.

ஊர்த்துவ தாண்டவத்தின் போது சிவன் தனது கையிலிருந்த டமருகம் எனப்படும் உடுக்கையை இசைத்தார். அது ஆவேசத்தை ஊட்டும் இசை. கூத்தப்பிரானின் ஆனந்தத் தாண்டவத்திற்கு மிருதுவானதொரு அங்கமாக நந்தியெம்பெருமான் மிருதங்கம் வாசிக்கின்றார்.

பாடுபவரின் பாடலுக்கு அல்லது ஆடுபவரின் ஆடலுக்கு அனுசரணையாக மிருதுவாக வாசிக்கப்படுவதால் (மிருது + அங்கம்) மிருதங்கம் எனப்பட்டது எனலாம்.

இவ்வாறானதொரு அற்புத இசைக்கருவியில் லயத்தேர்ச்சி நிரம்பப் பெற்று அரங்கேற்றம் காண்கிறார் திருநிறைச்செல்வன். திருச்செகநாதன் வரோதயன். ஸ்கந்தவரோதயாக்கல்லூரிப் பழைய மாணவனும், அளவெட்டி அருட்கவியரசு சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்களது பேரனும் ஆகிய செல்வன் வரோதயன் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் முதலாவது ஆண்டில் பட்டப்படிப்புப் பயின்று கொண்டிருக்கிறார்.

எமது மாணவர்கள் விஞ்ஞானக்கல்வியோடன்றி எமது கலை கலாசாரத்தோடு இணைந்த யாதாயினும் ஒரு துறையிலாவது தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டுமென்பது எனது அவா. விஞ்ஞான பீட மாணவர்களில் தரமான பாடகர்கள் வாத்திய இசைக்கலைஞர்கள் பரத நாட்டிய விற்பன்னர்கள் இருப்பதை அறியும் போதெல்லாம் எனது மனம் இறும்பூதெய்தும். அந்த வகையில் செல்வன் வரோதயனின் மிருதங்க வாத்திய வித்துவத்தைக் கண்டு நான் மகிழ்வும் பெருமையும் அடைகின்றேன்.

செல்வன் வரோதயனது தளிர்க் கரங்களில் திரு.சி. மகேந்திரன் போன்ற சிறந்த மிருதங்க வித்துவான்கள் தமது லயஞான அனுபவங்களைப் பதித்துள்ளனர். வட இலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும் தேர்வுகளில் மிகவுயர்ந்த தரமாகிய ஆசிரியர் தரத்தில் சித்திபெற்றதோடு 'கலா வித்தகர்' என்ற பட்டத்தையும் தனதாக்கிக் கொண்ட சீரியன் செல்வன் வரோதயன்.

சிறந்த சைவ பாரம்பரியக் குடும்பத்தைச் சேர்ந்த வரோதயன் சகல நலன்களும் பெற்று வாழ்வில் முன்னேற்றம் கண்டு இசைபட வாழவும் தமிழ்க் கலைக்குத் தொண்டாற்றவும் அவரது எதிர்கால நன்முயற்சிகள் யாவும் வெற்றியடையவும் ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் எல்லாம் வல்ல ஆடலரசனது திருவருளை வேண்டிப் பிரார்த்தித்து அவருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.குமாரவடிவேல்,

**பீடாதிபதி அலுவலகம்.**
**விஞ்ஞான பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# கலாநிதி சி.ஸ்ரீசற்குணராசா

(கணித புள்ளிவிபரவியற்துறை யாழ்பல்கலைக்கழகம்)

அவர்களின்

## வாழ்த்துச்செய்தி

அழகிய கிராமிய இயற்கை வனப்புகளுடன் கூடிய சிறந்த வளம்கொழிக்கும் விளைநிலத்தை தன்னகத்தேகொண்ட அளவெட்டிதனில் வீற்றிருந்து தெய்வீக அருள் சுரக்கும் நாகவரத நாராயணனின் திருவடிகளை போற்றி இறைபணி ஆற்றிவரும் பேரருளாளர் அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்களின் பேரன் செல்வன் திருச்செகநாதன் வரோதயனது மிருதங்க அரங்கேற்றம் நாகேஸ்வரத்தில் இனிதே நடைபெற திருவருள் கூடியுள்ளமையையிட்டு யாழ் பல்கலைக்கழக குடும்பத்தவர்களாகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வித்யாம் சாவித்யாம் ச யஸ்
தத் வேதோப்யம் ஸஹ
அவித்ய்யா ம்ருத்யும தீர்த்வா
வித்யயாம் ருதம் அசனுதே

(ஸ்ரீ ஈசோபநிஷத் மந்திரம் - 11)

"பௌதீக அறிவின் செயற்பாட்டையும் உன்னத தெய்வீக அறிவின் செயற்பாட்டையும் ஒரே சமயத்தில் அறியத்தக்கவன் மீண்டும் பிறந்து இறத்தலான நிலையை கடந்து நித்திய நிலையின் நலன்களை முழுவதுமாக அனுபவிக்கின்றான்" தெய்வீகச் சூழலில் வளர்ந்து வரும் செல்வன வரோதயன் இன்று எமது பௌதீக விஞ்ஞானத்துறை மாணவனாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட உபநிடதக் கூற்றுப்படி ஒரே வேளையில் ஜடச் செயற்பாட்டையும் ஆத்மீகச் செயற்பாட்டையும் ஒருங்கே அறியத்தக்கவனாகி இந்த மனிதப்பிறப்பினை நன்றே பயனுள்ளதாகக்குகின்றான்.

ஏற்கனவே தனது பாட்டனாரின் அரவணைப்பில் கற்க வேண்டியவற்றைக் கற்று இறைபணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவரும் செல்வன் வரோதயன் நல்லாசிரியரான வித்துவான் திரு.எஸ் மகேந்திரன் அவர்களிடம் திவ்விய இசைக்கருவியான மிருதங்க வர்த்தியத்தினை இயற்றும் வித்தையினைக் கற்று அரங்கேற்றம் காண்பது தற்போதைய கலியுகத்தின் யுகதர்மமான இறைவனின் நாம சங்கீர்த்தனத்தை முன்னெடுக்க பெரும் வாய்ப்பாக அமையும் என வாழ்த்தி கோவிந்தனைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி சி.ஸ்ரீசற்குணராசா,
கணித புள்ளிவிபரவியற் துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

## திரு.க. சிவாஜி

(ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல்வர்)

அவர்கள்

வழங்கிய

# ஆசிச்செய்தி

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அருமைந்தன் செல்வன் தி.வரோதயன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றச் செய்தியறிந்து ஆசி வழங்குவதில் அகமகிழ்கிறேன். எனது மாணவனாகிய இவர் மிகுந்த கடவுள் பக்தியும் குருபக்தியும் மிக்கவர் கல்லூரி வாழ்வில் கல்வியிலும், கலைத்துறையிலும் மிகுந்த நாட்டமுடையவராக விளங்கியவர் சிறந்த பெறுபேறுபெற்று, பல்கலைக்கழகம் சென்று எம்கல்லூரிக்கு மிகுந்த பெருமையைத் தேடித்தந்த இம்மாணவன் ஆன்மிகத்துறையிலும் மிகுந்த நாட்ட முடையவராக விளங்குகிறார். மிருதங்க வித்துவான் திரு.S மகேந்திரன் அவர்களிடம் நீண்டகாலமாக முறைப்படி மிருதங்கத்தை பயின்று அரங்கேற்றும் இவரை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சார்பில் வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றேன்.

திரு.க. சிவாஜி<br>
அதிபர்<br>
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி<br>
கந்தரோடை, சுண்ணாகம்.

# செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்ற வள்ளுவர் வார்த்தைக்கு அமைய எங்கள் கல்லூரி மைந்தன் மிருதங்க வித்தகனாக அரங்கேறுவது அறிந்து ஆசிரியர்களாகிய நாம் மனநிறைவடைகிறோம் செல்வன் தி. வரோதயன் புகழ்பூத்த தெய்வீகக்குடும்பத்து மைந்தன் அருள்ஞானம் சுரக்கும் அருட்கவி ஐயாவின் அருமைப்பேரன் இவன் கல்லூரி வாழ்நாளிலேயே பொலிவுடன் திகழ்ந்தான் கல்லூரி அரங்குகளில் அவன் ஆற்றலைக் கண்டு ஆசிரியர்களாகிய நாம் வாழ்த்தினோம் விஞ்ஞானத்துறையில் பல்கலைக் கழகத்தில் கற்கும் எம்மைந்தன் என்றும் ஆசிரியர்களை தெய்வமாக மதிக்கின்ற பக்குவமுடையவன். இன்று ஈழத்திற் தலைசிறந்த மிருதங்க மேதையாக விளங்குகின்ற திரு.மகேந்திரன் அவர்களிடம் முறையாகக் கற்று அறிஞர் சபையில் அரங்கேறுவது அறிந்து மிகுந்த ஆனந்தமடைகிறேன். எதிர்காலத்தில் சிறந்த அறிஞனாக கலை வித்தகராக எங்கள் மாணவன் வரோதயன் திகழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்
"பாலாவி"
இணுவில்

இந்துசமயப் பேரவையின்

## கௌரவ செயலாளர் திரு. சி. சக்திகிரிவன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

இந்து சமயப் பேரவைத் தலைவர் தெய்வீகப் பெருந்தகை, சிவஞானவாகீசர் திருவருட்கவிமணி அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களின் பேரன் திருவருட் செல்வன்.திருச்செகநாதன் வரோதயனின் மிருதங்க அரங்கேற்றத்தையொட்டி வெளியிடும் சிறப்புமலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சைவம் இசையோடிணைந்த பெருமைக்குரியது. இதனை இறைவனை இசைவடிவினனாகக் கண்டுதரிசித்த அருளாளர்கள் திருவருட்பாக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். நாதவிந்து கலா ஆதி நமோ நம என்கிறார் அருணகிரியார். இவர்களெல்லாம் இறைவன் பாடு எனப்பாடிய பெருமைக்குரியவர்கள். இத்தகைய திருவருட்பாக்களுக்கு பக்கவாத்தியமாக விளங்கும் மிருதங்கம் தெய்வாம்சம் பொருந்தியதாகத்திகழ்கிறது நந்தியெம்பெருமான், நடராஜப்பெருமானின் இடையறா நடனத்திற்கு மிருதங்க வாத்தியம் இசைத்தபடியே இருக்கிறார். இத்தகைய உயர்ந்த வாத்தியக்கலை எமது மண்ணில் புதுமெருகோடு வளர்ந்தோங்கி வருவது, கண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

மிருதங்க வாத்தியக்கலை அன்னியநாட்டுக்கலை மோகங்களினால் அருகியபோது இந்தியத் திருநாட்டிலிருந்து வருகைதந்து இக்கலையை ஊக்கிவளர்த்த பெருமை தமிழ்நாடு சங்கீதபூஷணம் A.S. இராமநாதன் அவர்களையே சார்ந்தது. அவர் சிறந்த இசைஞானம் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "சங்கீதபூஷணம" விருதும் பெற்ற சிறப்பிற்குரியவர். யாழ்ப்பாணத்தில் ஒரு குருபரம்பரையைத் தோற்றுவித்தவர். நாட்டுச் சூழ்நிலையால் தமிழ் நாடு மீண்டுள்ளார். இவரது முன்னணி மாணவர்களில் புகழ்பூத்த வித்துவான் லய ஞானவாரிதி திரு.எஸ்.மகேந்திரன் இவரது பணியை நன்கு பேணித் தொடர்ந்து வருகிறார். இவர் யாழ் பல்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளராகத் திகழ்பவர். இவரது மாணவனே எமது பேரன்பிற்குரிய திருவருட்செல்வன்

திருச்செகநாதன் வரோதயனாவார். மிருதங்க வாத்தியத்தை வாசிப்பதிலுள்ள நுணுக்கங்களை நன்கு கற்றுத்தேர்ந்து அரங்கேற்றம் நடைபெறும் நிறைவு பெற்றுள்ளார். மிருதங்கத்துறையில் ஆசிரியத்தரம், கலாவித்தகர் ஆகிய பரீட்சைகளில் நல்ல சித்தி பெற்றவர். இவர் கல்வித்துறையிலும் சிறந்து வளர்ந்து வருபவர். யாழ் பல்கலைக்கழக 2ஆம் ஆண்டு மாணவன்.

இவற்றுக்கெல்லாம் மகிடம் வைத்தாற் போல் எமது பேரன்பிற்குரிய அருட்கவி ஐயாவின் பேரன் என்ற பெருந்தொடர்பால் மட்டுமல்லாது, திருவருட்தொடர்பால் ஐயாவின் அரவணைப்பையும் பெற்றவர். இயல்பிலே தெய்வீகம்சம் நிரம்பப் பெற்றவர். ஆலயத்திருத் தொண்டில் உள்ளத்தைப் பறிகொடுத்து ஈடுபடும் தவம்பெற்றவர்.

இவர் எதிர்காலத்தில் உலகிற்கு வழிகாட்டும் சிறந்த பக்திமானாகத் திகழும் குணாம்சங்கள் அத்தனையும்பொருந்தியவராகக் காணப்படுகிறார்.

இத்தகைய திருவருட் சிறப்பெல்லாம் பல்கிப் பெருகப் பெற்றுத்திகழும் திருவருட்செல்வன் வரோதயனின் திருவருட்பணி வளர்ந்தோங்க என்றும் எம்முள்ளத்தில் எழுந்தருளாட்சி செய்யும் ஸ்ரீபார்வதி பரமேஸ்வரனுடைய திருவருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

வாழ்க பல்லாண்டு!

சி. சக்திகிரீவன்.

# திரு. ஐ. கோ. சந்திரசேகரம்

**யாழ். பல்கலைக்கழக மார்ஷல்**

அவர்களின்

## *வாழ்த்துரை.*

பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாயும் விளங்கும் தோற்கருவியாகிய மிருதங்கம், தண்ணென்ற ஒலியெழுப்பும் தண்ணுமையாகவும் முதிர்நிலை அதிர்வுகளை ஏற்படுத்து முதிர்முழவாகவும், மண்ணொடு விண்ணை இணைக்கு மிடற்றொலியுடன் இணையும் கலைக்கருவியாகவும். பண்ணிசையுடன் இணைந்த பழமைக் கருவியாகவும் கர்நாடக சங்கீதத்துடன் இணைந்த லயக்கருவியாகவும் விளங்குகின்றது. இப்படி விளங்கும் மிருதங்கக் கல்வியை வளமுறச் செய்யும் நல்லாசான் "லயஞான வாரிதி" சி.மகேந்திரன் அவர்களிடம் முறையாகக் கல்வி கற்ற செல்வன். திருசெகநாதன் வரோதயன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் இன்று நிகழ்கின்றது. வரோதயன் நாகவரதநாராயணன் தந்த தெய்வக் குழந்தை. எமது அருட்கவி ஐயாவின் பேரன்-ஞானக் கண்ணனாக திகழ்பவர். இறை நம்பிக்கையும் நாராயணரை முப்போதும் திருமேனி தீண்டும் பாக்கியமும் ஒருங்கே பெற்றவர். பண்பான மாணவன். யாழ். பல்கலைக்கழகத்தில் கணனி எனும் புதிய யுகத்தை ஏற்படுத்தும் பாடத்தைக் காதலித்துக் கற்கின்றார். ஆனால் அருட்கவி ஐயாவின் மரபை என்றும் மாறாது மறவாது பேணுபவர். எனவே சிவத்துடன் என்றும் இணைந்துள்ள அந்த தெய்வீகக் கலை வரோதயனிடம் மிளிர்வதைக் கண்டு பெருமிதம் அடைகிறேன். இறைவன் சகல செல்வங்களையும் அருள வேண்டும் என வேண்டி இவரது மிருதங்க தேவகான அரங்கேற்றம் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

நன்றி

திரு.. ஐ. கோ. சந்திரசேகரம்,
மார்ஷல் / யாழ். பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

## மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்

அவர்களின்

## *வாழ்த்துமாலை*

### அளவையெம்பதியின் கலைஞனே வாழி!

அரங்கேறும் கலைஞனுக்கு தமிழ்வாழ்த்து

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணரின் நல்லாசி

வரம் கொடுத்த கலைமகளின் வரவேற்பு

வரலாற்றில் இடம்பிடிப்பான் வரோதயன்

திறமான லயஞான வாரிதி மகேந்திரனின் மாணவன்

திக்கெட்டும் புகழ்பரப்பும் இளங்கலைஞன்

அறம் பெருக்கும் குடும்பத்தில் அரும்புதல்வன்

அளவையெம்பதி தந்த பெருங்கலைஞன் வாழி!

– மதுரகவி காரை எம் பீ. அருளானந்தன் –

28 – – 01 – 2001

செயலர். கல்வி கலை இலக்கியபண்பாட்டுக் கழகம்

திருவள்ளுவர் சாலை - யாழ்ப்பாணம்



## ஆலங்காட்டில் ஆடிய நடனம்

திருவாலங்காட்டின் பெருமையைக் கேட்டறிந்த சுநந்தமுனிவர் அங்கேஎம்பெருமானின் நடனத்தைக் காண்பதற்காகச் சென்று தவம்புரிந்து கொண்டிருந்தார்.

சிவபெருமானின் கைவிரல் அணியாக விளங்கிய கார்க்கோடகன் என்ற பாம்பு, பெருமானது விரலில் விஷத்தைக்கக்கியது. உடனே சிவபெருமான் "தருக்குடையவனே" நம்மைக் கருதாது நடந்து கொண்டாய் ஆதலால் நீ இக்கைலையைவிட்டு நீங்குவாயாக" என்று சபித்தார் நாகம் நடுங்கியது. கருடனுக்குப் பயந்தது. பெருமானைப் பிழை பொறுக்கும்படி மன்றாடியது "கார்க்கோடகா கவலைப்படாதே இத்தீர்த்தத்தில் முழுகி திருவாலங்காட்டு முத்தி தீர்த்தத்தில் எழுவாய். பின் அங்கே சுநந்த முனிவருடன் தவம் செய்து கொண்டிருந்து, எனது நடனங்கண்டு விமோசனம். பெறுவாயாக" என்றார் அப்படியே கார்க்கோடகன் சுநந்த முனிவருடன் தவம் செய்து கொண்டிருக்கிறான்.

நிசும்பன் சும்பன் என்னும் இரு அசுரர்கள் இறைவனிடம் பெற்றவரத்தின் செருக்கால் பற்பல கொடுமைகள் புரிந்தனர். பொறுக்கமாட்டாததேவர்கள் உமாதேவியை நோக்கித் தவம்செய்தனர். அகிலாண்டநாயகியாகிய அம்பிகை, தேவர்கள் முன்தோன்றி "உங்களைத்துன்புறுத்தும் அசுரர்களை அழிப்பேன்" என்று திருவாய் மலர்ந்து மலைச்சாரலிலே சிவனை நினைந்து தவமிருந்தாள் சண்டன் முண்டன் என்னும் அசுரர்கள் தேவியின் அழகைக்கண்டு ஏ.பெண்ணே எமது

தலைவன் சும்பனுக்கு வாய்த்தபெண் நீதான். எம்முடன்வருக, என வலிந்திழுத்தனர். எம்பெருமாட்டி வெகுண்டாள் தனது தோளிலிருந்து ஒருசக்தியையும் சேனைகளையும் தோற்றுவித்தாள். அந்தச் சக்தியால் அசுர சேனைகளுடன் சண்டனும் முண்டனும் அழிந்தனர். உமையவள் அந்தச் சக்தியைப்பார்த்து "நீ சண்டனையும் முண்டனையும் அழித்தமையால் சாமுண்டி என்ற பெயர்பெற்று உலகத்தவரால் பூசிக்கப்படுவாயாக" என்று ஆசீர்வதித்தார். இதனையறிந்த நிசும்பன் சும்பன் என்னும் அவுணர் அசுரசேனைகளுடன் வந்து போர் தொடுத்தனர். உமையவள், தன் உடம்பிலிருந்து சப்த மாதர்களையும் சிவதூதியரையும் தோற்றுவித்துப் போரிடச்செய்தனள். அசுரசேனைகள் எல்லாம் அழிந்தன. இறைவியார், முதலில் நிசும்பனையும் பின்பு சும்பனையும் கொன்றழித்தார்.

இவ்விரு அசுரர்களின் தங்கையாகிய குரோதி என்பவளின் மகன் இரத்த பீஜன் அவன் இதனையறிந்தான். அவனது உடலிலிருந்து ஒருதுளி உதிரம் தரையில் விழுந்தால் அத்துளி மாறுதன்னைபோல் அசுரனாகுமாறு வரம் பெற்றவன். அத்தகைய இரத்தபீஜன் போருக்குவந்தான்.

அவனுடன் சப்தமாதர் போரிட்டுத்திகைத்தனர். விஷயத்தை அம்பிகைக்குத் தெரிவித்தனர். அம்பிகையின் கோபத்தோடு அவரது தோளிலிருந்து உக்கிர காளிதோன்றினாள் "பெண்ணே உன் கையிலுள்ள கபாலத்தினால் இரத்தபீசனின் குருதி நிலத்தில் விழாமல் ஏந்திக்குடிப்பாயாக" எனக்காளிக்குக்கட்டளையிட்டு, இறைவியார் இரத்திபீஜசனைச் சங்கரித்தார். வெற்றிமாலை சூடினார். விண்ணவர்க்கு வாழ்வளித்தார். காளிக்குச் சண்டி என்ற நாமமிட்டு பற்பலவரங் கொடுத்து மறைந்தருளினார்.

காளி, உமைதந்த வரத்தால் இறுமாப்புற்றுமோகினி இடாகினி பூதபிசாசுகள் புடைசூழ, வனங்களெல்லாம் உலாவி ஊன்களைப்புசித்து உலகம்சுற்றி கடைசியில் திருவாலங்காட்டிற்கு வந்து சேர்ந்தாள். எல்லா உயிர்களுக்கும் சொல்லொணாத்துன்பம் செய்தாள்.

ஒருநாள் நாரதமகரிஷி அவ்விடம் வந்தார். கார்க்கோடகன் காளியின் செயலைக்கூறினார். இத்தருணம், நாரதரை விழுங்வதற்காகக் காளி ஓடிவந்தாள். நாரதர் விரைவாக மறைந்து சென்று தப்பினார். பின்பு திருமாலிடம் காளியின் செயலைக்கூறினார். திருமால் சிவனிடம் முறையிடச் சிவன் புன்முறுவல்பூத்து - வயிரவ வடிவங்கொண்டு வந்தார். திருவாலங்காட்டிற்கு; அங்கே சிவன் வைரவராக வரக்கண்ட காளி-வெகுண்டாள் நாம் நிருத்தயுத்தம் செய்வோம் வருக! என்று நடனமாடத் தொடங்கினாள். எம்பெருமானும் நடனமாடத்தொடங்கினார். அத்தருணம் கார்க்கோடகன், முஞ்சிகேசமனிவர், தேவர்கள் இத்திவ்விய திருநடனத்தைக்கண்டு

கண்மழை பெய்தனர். அநவரதம், அற்புதம், ரௌத்ரம் கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை. வீரியம் என்னும் நவரசங்களும் அபிநயமும் விளங்க வாத்தியங்கட்கொப்ப பாண்டரங்கமாகிய சண்ட தாண்டவத்தைக் காளியுடன் அப்பன் ஆடியருளினார்.

இப்படிநடம்புரிகையில் - நிருத்த வேகத்தால் திருச்செவியிலிருந்து குண்டலமொன்று நிலத்தில் வீழ்ந்தது. அதைத் தனது திருவடியால் எடுத்துத் திருச்செவியிற் தரித்து ஊர்த்துவ தாண்டவம் செய்தார்.காளி செயலற்று நாணி நின்றாள். பணிந்தாள். "நீ இங்கு எனது சத்தியாயிரு" என்று பரமன் திருவருள் புரிந்தர்.

இவர் ஆடும் போது விழுந்த குண்டலம் தத்தித் தொம் நம் என்ற ஓசை செய்தமையால் அவ்வோசையை அடிப்படையாகக் கொண்டு தத்தகாரம் மலர்ந்ததெனக் கூறுவர். அவளுடைய ஆடலின்போது பக்கவாத்தியமாக அமைந்த தாளவாத்தியக்கருவிகளைக் காரைக்கால் அம்மையார் இங்கு குறிப்பிடுகிறார்.

துத்தம் கைக்கிள்ளை விளரிதாரம்
　　உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடி
சச்சரி கொக்கரை தக்கையோடு
　　தகுணிதம் துந்துபி தாளம்வீணை
மத்தளம் கரடிகை வன்கைமென்தோற்
　　றமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடாடு மெங்கள்
　　அப்பனிடம் திருவாலங்காடே"

இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொண்டு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலும் தாமாய் நின்றாடுகின்றாரே-

(திருமந்திரம்)

ஆடலனுக்கினியது தாள வாத்தியம்

பிரதியாக்கம்

**அருட்கவி சீ. வி**

# எங்கள் மனங்கனிந்த நன்றி.

எமது மகன் வரோதயனின் மிருதங்க அரங்கேற்றத்தில் பங்குபற்றிய செம்மனச் செல்வர்களாகிய மிருதங்க லயஞானவாரிதி திரு.சி. மகேந்திரன் அவர்கள்விழாத்தலைவர் பேராசிரியர் திரு இ.குமாரவடிவேல் அவர்கள் பிரதம விருந்தினர்களாக வாழ்த்துரைவழங்கிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு.பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள் ஆசியுரை வழங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்) அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள் வரவேற்புரை வழங்கிய திரு.ஐ. கோ.சந்திரசேகரப்பிள்ளை அவர்கள். மதிப்பீட்டுரை வழங்கிய கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள்.சிறப்புரை வழங்கிய ஸ்கந்தா அதிபர் திரு. க.சிவாஜி அவர்கள், செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் சிவஞானி. திரு.சி. சக்திகிரீவன் அவர்கள் நன்றியுரை வழங்கிய திரு.த. குணபாலசிங்கம் J.P அவர்கள் இம்மலருக்கு கட்டுரை- ஆசியுரை- வாழ்த்துரை வழங்கியசான்றோர்கள் இசையரங்கில் நிகழ்ச்சி வழங்கிய கலைஞர்கள் சமூகந்தந்து சிறப்பித்த பெரியோர்கள், தாய்மார்கள் உறவினர்கள், நண்பர்கள், அபிமானிகள்,இம்மலரைச்சிறப்புற அச்சிட்டுதவிய நல்லூர் பிள்ளையார் அச்சகத்தார்கள் யாவருக்கும் எமது மனமுவந்த நன்றி கூறிவணங்கி நிற்கிறோம்.

இங்ஙனம்
**வரோதயனின்**
**தந்தையும், தாயும்,**



பிள்ளையார் அச்சகம், நல்லூர். யாழ்ப்பாணம்.